[1971 டிசம்பர் 18

THIRU K. M. SUBRAMANIAM : In view of certain urgency for improvement of the City just like Calcutta Corporation, has this Government represented to the Government of India to give a block grant of a few crores of rupees under the Metropolitan Improvement Scheme?

THE HON. THIRU K. ANBAZHAGAN : That comes under the Local Boards Ministry and the Hon. Minister for Education should reply to that.

திரு. கா. வேழவேந்தன் : இந்தச் சென்னைப் புறநகர் திட்டத்திலே சென்னை நகரைச் சுற்றியுள்ள செங்கற்பட்டு மாவட்டப் பகுதிகளில் எந்த எந்தப் பகுதிகள் சேர்க்கப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, எப்பொழுது சேர்க்கப்படுகிற பகுதி, ஒட்டிய பகுதியாகத்தான் இருக்குமே ஒழிய, எட்டிய பகுதியாக இருக்காது. ஒட்டிய பகுதியைச் சேர்க்கும்போது, 150 சதுர மைலுக்குள் அடங்கிய பகுதிகள் வரும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்தத திட்டத்திலே, இப்பொழுது இருக்கிற சென்னை நகர எல்லைப் பகுதியில் தொழிற்சாலைகள் இருப்பதால், சுற்றுப்புறங்களில் அமைக்கும் முறையில், திட்டம் இருக்கிறதா ? அப்படியானல், இனிமேல் வரும் இடைக் காலத்தில், அத்தகைய புதிய தொழிற் சாலைகளை நகரத்திற்குள்ளேயே ஏற்படுத்தாமல் வெளிப் புறங் களிலேயே அமைக்க வழி செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு அப்பாற்பட்டது இந்தத் துணைக் கேள்வி. மூலக் கேள்வியின் நோக்கம், சென்னை நகரத்தை ஒருங்கிணைந்ததாகச் செய்ய, சாலைப் போக்குவரத்து, கழிவுநீர், குடிசை மாற்றம் இவற்றையெல்லாம் உள்ளடக்கிய திட்டம் என்ன என்பது பற்றியது; தனியார் அமைக்கும் தொழிற்சாலைகள் பற்றியது அல்ல. பொதுத் துறையின் அடிப்படையில் அமைகிற இந்த அமைப்புகள் பொருத்ததாகும். விரிவுத் திட்டம் வருகிறது. தொழிற்சாலை எந்தப் பகுதியில் இருப்பது நல்லது என்கிற பொருள்பற்றி தனிக் கருத்து அப்பொழுது உருவாகும்.

அரூர் அரசு மருத்துவமனையில் எக்ஸ் கதிர்வீச்சுப்பிரிவு

*** 559 வினு—டாக்டர் ச. அ. சின்னராசு :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரூர் வட்டத்தலைமை அரசினர் மருத்துவ மனையில் எக்ஸ்-ரே சாதனம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

1971 டிசம்பர் 18]

(இ) அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) கேள்வி எழாது.

கும்முடிப்பூண்டியில் வட்டத்தலைமை மருத்துவமனை

* 560 வினு—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

கும்முடிப்பூண்டியில் வட்ட அளவு தலைமை மருத்துவமனை (Taluk Head-quarters Hospital) கட்ட திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, ஒரு துணை வட்டத்தில் இருக்கின்ற அளவுக்கு இல்லையென்பதாலும், ஒரு வட்டத்தில் இருக்கின்ற அளவுக்கு இருப்பதாலும், எப்படியாவது நெருக்கடி நிலை தீர்ந்த பிறகாவது ஒரு தாலுக்கா ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவமனையை அங்கே அமைக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இதில் இரண்டு தவருன கருத்துக்கள் இருக்கின்றன. சில தாலுக்கா மருத்து மனைகளைவிட ஆரம்ப சுகாதார நிலையங்கள் அழகாகக் கட்டப்பட்டிருந்தாலும், அங்கும் ஒரே டாக்டர்தான். இங்கும் ஒரே டாக்டர்தான். ஆரம்ப சுகாதார நிலையம் ஒரு நல்ல மருத்துவ மனை அல்ல என்று கருதக்கூடாது. இரண்டாவது, கும்முடிப்பூண்டி, ஒரு பிர்க்காத் தலைநகரமே தவிர, தாலுக்கா தலைநகரம் அல்ல. பல்வேறு பிர்க்காத் தலைநகரங்களில் என்ன நிலைமை இருக்கிறதோ அந்த நிலைமைத்தான் அங்கும் இருக்கிறது.

Assistance by Veterinary Department personnel

* 561 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether the Race Course requisitions the services of the personnel of the Department of Veterinary Services of the State Government during the Race season ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) பேரவை முன்னர் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

@- 117-119-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.